**என் டோஸ்ட்மாஸ்டர்ஸ் பயணம்**

*By Lilian Lau, DTM District 51 Governor 2001-2002*

**திருவாட்டி லிலியன் லாவ், மாவட்டம் 51-ன் கவர்னர் 2001-2002**

*மாவட்டம் 51 தோன்றிய புதிதில் 1992, ஏப்ரல் மாதம் என்னுடைய டோஸ்ட்மாஸ்டர்ஸ் பயணம் தொடங்கியது. கடந்த 13 ஆண்டு காலமாக மாவட்டம் 51ன் முன்னேற்றத்தோடு இசைந்தே என் வளர்ச்சியும் இருந்தது.*

*தொடக்கத்திலிருந்தே டோஸ்ட்மாஸ்டர்ஸ் இயக்கம் என்னுள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. மிகவும் உற்சாகமான நான் 1992-லியே தாய்லாந்து நகர் பாட்டையா மாநாட்டிற்கு சென்று வந்தேன். முப்பது மாநாடுகள் மற்றும் ஏழு தலைமையக வருடாந்திர மாநாடுகளில் கலந்து கொண்ட போதிலும் என் உற்சாகம் குறையவில்லை.*

*எங்கள் மன்றத்தில் நான் சேர்ந்த உடனேயே செயற்குழுவில் சேர்த்துக்கொள்ளப்பட்டேன். 1995-ல் நான் ஆர்சர்ட் டோஸ்ட்மாஸ்டர்ஸ் மன்றத்தின் தலைவியாக தேர்ந்தெடுக்கப்பட்டேன். என் பதவிக் காலத்தில் இம்மன்றம் மாவட்டம் 51-ல் 30-39 உறுப்பினர்களைக் கொண்ட மன்றங்களுள் 4வது இடத்தைப் பிடித்தது. எப்போதுமே தயக்கமும், சங்கோஜமும் நிறையப்பெற்ற எனக்கு இம்மன்றத்தின் தலைமைத்துவம் ஒரு சவால் நிறைந்த அனுபவமாக அமைந்தது. ஆனால் மன்றத் தலைமைத்துவ வாய்ப்பு ஒரு முறையே பெறமுடியும் என்பதால் என்னுடைய தலைமைத்துவ பண்புகளை வளர்த்துக்கொள்ள உறுதி மேற்கொண்டேன். அதைத் தொடர்ந்து 1996-1997-ல் - ஏரியா **D**2 கவர்னராக பதவியேற்று [தலைவரின் சிறப்புத் தகுதி பெற்ற ஏரியாவாகவும்] 1997-1998-ல் டிவிஷன் **D** கவர்னராக பொறுப்பேற்று [தலைவரின் சிறப்புத் தகுதி பெற்ற டிவிஷனாகவும்] 1998-1999 ஏரியா D4 கவர்னராக பொறுப்பேற்று [தலைவரின் சிறப்புத் தகுதி பெற்ற ஏரியாவாகவும்] தேர்ச்சிபெற்று தொடர் சாதனை புரிந்தேன். இந்த மூன்று பதவிகளும், மாவட்ட அளவில் உயர் பதவிகளை ஏற்க எனக்கு ஒரு நல்ல அடித்தளம் அமைத்துக் கொடுத்தன. ஏரியா கவர்னராகவும், டிவிஷன் கவர்னராகவும் இருக்கும்போது, ஆதரவு தேவைப்பட்ட மன்றங்களுக்கு ஆலோசனைகள் வழங்குவதற்கு அதிக நேரமும் சக்தியும் செலவிட்டேன். புதிய மன்றங்கள் உருவாக்குதல், பலவீனமான மன்றங்களுக்கு பயிற்சியளித்தல், மன்றங்களுக்கும் மாவட்ட அதிகாரிகளுக்கு மதிநுட்ப ஆலோசகராக இருப்பது ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்தினேன். 1997 முதல் பல்வேறு புதிய மன்றங்களை உருவாக்கினேன். டிவிஷன் D மிகச் சிறந்த டிவிஷனாக உருவாகியதில் நான் பெருமை கொண்டேன்.*

*லெஃப்டினண்ட் கவர்னர் மற்றும் மாவட்ட கவர்னர் பதவிகள், ஏரியா கவர்னர் மற்றும் டிவிஷன் கவர்னர் பதவிகளிலிருந்து முற்றிலும் மாறுபட்ட பொறுப்புகளையும், அனுபவங்களையும் வழங்கியது காரணம், இப்பொறுப்புகள் இரண்டுமே, புருனே, ஹாங்காங், இந்தோனேஷியா, மக்காவ், மலேசியா, சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் மன்றங்களை உள்ளடக்கியது. 1999-2000 லெஃப்டினண்ட் கவர்னராக நான் இருந்த போது 57 புதிய மன்றங்களை உருவாக்கி உலக சாதனை புரிந்தோம். அந்தக் காலக் கட்டத்தில் நான் தனிப்பட்ட முறையில் 13 மன்றங்களை உருவாக்கினேன். என்னுடைய மாவட்ட கவர்னர் பதவிக்காலம் முடிவதற்குள் மேலும் 30 புதிய மன்றங்களை உருவாக்கினேன். புதிய மன்றங்களை உருவாக்குவதே என் தலையாய ஆசையாக இருந்தது காரணம் ஒவ்வொரு புதிய மன்றமும் பலருடைய வாழ்க்கையில் மாற்றங்களை கொண்டு வரும் என்று நான் நம்பியதே. ஆகஸ்ட்,*

*1999-ம் ஆண்டு சிகாகோ நகர், அமேரிக்காவில் நடைபெற்ற வருடாந்திர மாநாட்டில் "புதிய மன்றங்கள் உருவாக்குதல்" என்ற தலைப்பில் உரையாற்ற என்னை அழைத்திருந்தார்கள். லெஃப்டினண்ட் கவர்னர் கல்வி மற்றும் பயிற்சி பொறுப்பேற்ற சமயத்தில் சாதனையளவிலான CTM விருதுகளைப் பெற்றோம். நான் மாவட்ட கவர்னராக இருந்த போது [தலைவரின் சிறப்புத் தகுதி பெற்ற மாவட்டம்] நமது மாவட்டம் தொடர்ந்து நான்காவது முறையாக முதலிடத்தைப் பிடித்தது.*

*நம் மாவட்டம் எப்படி சிறப்பாக செயல்படமுடிந்தது?*

*வெற்றி பெறுவதற்குரிய காரணங்களை அடையாளம் கண்டு அவற்றை அடைவதற்கு கடின உழைப்பும், உறுதியும்கொண்டு போராடினோம், உலகிலேயே முதன்மையான மாவட்டமாக பெயர்பெற்றோம்.*

*ஆகஸ்க் 2003-ல் அமெரிக்காவின் அட்லாண்டா நகரில் நடைபெற்ற வருடாந்திர மாநாட்டில் "கனவுகளை எப்படி மெய்யாக்குவது : சிறப்பு தேர்ச்சி பெற்ற மாவட்டம், டிவிஷன் மற்றும் ஏரியாக்களை எப்படி பெறுவது" என்ற தலைப்பில் உறையாற்ற என்னை அழைத்திருந்தார்கள். தலைமையகம் ஏற்பாடு செய்யும் வருடாந்திர மாநாட்டில் இருமுறை பேச வாய்ப்பு பெற்றமை குறித்து பெருமையாக கருதுகிறேன் அதே சமயம் வெற்றிபெற்ற மாவட்டமாக தொடர்ந்து விளங்கும் நம்மிடமிருந்து பிற மன்றங்கள் கற்றுக்கொள்ள வேண்டும் என்று தலைமையகம் விரும்பியதையும் இது உணர்த்தியது.*

*எனது டோஸ்ட் மாஸ்டர் பயணம் வியப்பும், மகிழ்ச்சியும் நிரம்பிய அனுபவமாக அமைந்தது. தயக்கமும், வெட்கமும் நிறைந்த நான் ஒரு நாள் மாவட்டம் 51-ற்கு கவர்னராக வருவேன் என்று சிறிதளவும் நினைத்தது கிடையாது. நான் ஏற்றுக்கொண்ட ஒவ்வொரு வகையான தலைமைப் பொறுப்பும் சவால் நிறைந்ததாக இருந்தது, ஆனால் நான் ஒவ்வொரு சவாலையும் என் டோஸ்ட்மாஸ்டர் பயணத்தின் படிப்பினையாக எடுத்துக்கொண்டேன். பத்தாண்டு காலம் என் தலைமைத்துவ பயணத்தில் டோஸ்ட்மாஸ்டர் இண்டர்நேஷனலின் நேர்மை, மேன்மை, உறுப்பினர்களுக்குச் சேவை மற்றும் தனிநபருக்குரிய மரியாதை ஆகியவை எனக்கு வழிகாட்டிகளாக அமைந்தன.*

*டோஸ்ட்மாஸ்டர் பயணம் என்பது பேச்சுக்கலையை வளர்த்துக்கொள்வது, இலக்குகளை எட்டுவது மற்றும் சாதனைகளை அங்கீகரித்தல் ஆகியவை மட்டும் அல்ல. இப்பயணம் நம் எல்லொருக்கும் ஒரே மாதிரிதான் வடிவமைக்கப்பட்டுள்ளது ஆனால் நம் ஒவ்வொருவரின் இலக்குகளை எவ்வாறு எட்டுகிறோம் என்பதில்தான் வேறுபாடு உள்ளது. டோஸ்மாஸ்டர் மன்றங்களின் முக்கிய மதிப்புகளை பின்பற்றுவதன் மூலம் ஒவ்வொருவரும் டோஸ்மாஸ்டர் பயணத்தின் வெற்றியை உணர்ந்துகொள்ள முடியும்.*

*மறைந்த லிலியன் லாவ், DTM, மாவட்டம் 51ன் கவர்னர் 2001-2002, நவம்பர் 11ம் தேதி 2005ல் தன் டோஸ்ட் மாஸ்டர் பயணத்தை இனிதே நிறைவு செய்தார்.*